**பாடம் – 2**

# இயேசு - தேவனுடைய தெய்வீகக் குமாரன்
# (JESUS - THE DIVINE SON OF GOD)

"இந்த புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தனது சீஷருக்கு முன் பாக செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப் பட்டிருக்கிறது" (யோ. 20:30,31)

வேதாகமத்தின் முதல் புத்தகமான ஆதி யாகமத்திலே, முதல் மனிதனாகிய ஆதாமையும் முதல் மனுஷியாகிய ஏவாளையும் தனது சாயலில் படைத்து, ஒரு அருமையான உலகமாகிய ஏதேன் தோட்டத்திலே தேவன் வைத்தார் என்று வாசிக் கின்றோம். தேவன், அவர்கள் கடைபிடிக்கும் படியாக கட்டளைகளைக் கொடுத்தார். ஆனால் அவர்கள் அதை மீறினார்கள். தேவனுடைய கட்டளையை மீறுவதே பாவம். ஆதாமும், ஏவாளையும் போலவே நாமும் பாவம் செய்தோம்.

"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ. 6:23) இந்த மரணம், மனிதர்கள் அடையக்கூடிய சரீர மரணம் (உடலில் இருந்து ஆவி பிரிவது) அல்ல. மாறாக, இந்த மரணம் தேவனிடமிருந்து அடையக் கூடிய நித்திய பிரிவைக் குறிக்கிறது. 2தெச. 1:7,8 வசனங்களில் நாம், "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படி-யாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்" என்று இயேசுவைக் குறித்து வாசிக்கின்றோம்.

நித்திய தண்டனைக்கு தப்பிக் கொள்ள நாம் தேவனைப்பற்றித் தெரிந்து கொண்டு சுவிசேஷத் திற்கு எப்படி கீழ்ப்படிவதென்று அறிந்து கொள்ள வேண்டும். தேவன் யார் என்பதையும், எப்படி நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதையும் பைபிள் நமக்கு வெளிப்படுத்துகிறது. மனிதனை அவனுடைய பாவத்திலிருந்து விடுவிக்கும்படி யான தேவதிட்டம், முதலில் ஏதேன் தோட்டத்தில் காணப்படுகிறது. மனிதனுடைய பாவத்திற்கான தண்டனையைக் குறித்து அங்கே அவர் சொன்ன மாத்திரத்திலேயே, அவனை விடுவிக்கும்படியான வாக்கையும் கொடுத்தார். (ஆதி. 3:15)

பின்பு தேவன், ஆபிரகாமையும் அவருடைய சந்ததியையும், அவருக்குச் சொந்தமான சிறப் பான ஜனமாக தெரிந்து கொண்டபோது, "உன் னுடைய சந்ததியின் மூலம் பூமியிலுள்ள சகல தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. 26:5 மற்றும் 28:14) என்று கூறினார். இயேசுவே சகல தேசங்களையும் ஆசீர்வதிக்கும் வித்து (கலா. 3:16) ஆபிரகாமின் சந்ததியின் மூலம் (பழைய ஏற்பாட்டின்படி) வருபவர் இயேசுவே. புதிய ஏற்பாட்டின் பொருள் இதுவே.

**இயேசு தனித்தன்மை உடையவர் :**

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயேசு பிறந்தார். முழுக்க மனிதனாகவும், தெய்வீகத் துடனும் வாழ்ந்த ஒரே மனிதர் இயேசுவே. இது புரிந்து கொள்வதற்கு கடினமாக இருக்கலாம்; ஆனால் வசனம் இவ்வாறு சொல்கிறது. "ஆதி யிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோ. 1:1)

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபை யினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமை யாகவே இருந்தது" (யோ. 1:14)



மாம்சப் பிரகாரமாக, இயேசு ஆபிரகாமின் சந்ததியில் வந்தார். அவர் தேவத்துவத்தின் ஒரு அங்கமும் கூட, தேவன் (நம்மைப் போல) மனித என்று சொல்லுகிறது. இந்த ஒரே காரணத்திற்காகத்தான், இயேசு பரலோகத்தைவிட்டு, இந்த பூமிக்கு வந்தார். ஆனால் அவர் பார்வைக்கு மற்ற மனிதர் களைப் போல் சாதாரணமானவராக இருந்ததால், தான் ஜனங்களை இரட்சிக்கக்கூடிய தேவனுடைய குமாரன் என்று இயேசு விளக்க வேண்டி யிருந்தது. அவர் தன்னுடைய தன்மையைத் தான் செய்த அற்புதங்களினாலும், அடையாளங் களினாலும், அதிசயங்களினாலும் நிரூபித்தார். (இப்பாடத்தின் துவக்கத்திலுள்ள அந்த பத்தியைப் படியுங்கள்).

38 வருடங்களாக நடக்க முடியாமல் இருந்த ஒரு மனிதனை இயேசு குணமாக்கினார் (யோ.5:5-9) மேலும் 5 அப்பங்களையும், 2 மீன்களையும் வைத்து 5000 மக்களுக்கு உணவளித்தார். (யோ.6:9-14). அவர் பிறவி யிலேயே குருடனாய் பிறந்த ஒரு மனிதனைப் பார்வையடையச் செய்தார் (யோ.9:1-7). அவர் மரித்த லாசருவை உயிரோடு எழும்பச் செய்தார் (யோ.11:38-44) மேலும் இயேசு செய்த அற்புதங்களில் இவை ஒரு சிலவையே. இந்த அற்புத அடையாளங்களின் விளைவுகள், வேதாக மத்தின் பல வசனங்களில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

"....... அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (யோ. 2:23)

"அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங் களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின் சென்றார்கள்." (யோ. 6:2)

".....ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால், நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான்" (யோ. 3:2)

மரித்த லாசருவை இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினபோது, அநேக யூதர்கள் அவர்மேல் நம்பிக்கை வைத்தனர்; மாறாக, பிரதான ஆசாரியர்களோ அவர்மீது பொறாமைக்கொண்டு அவரை கொலை செய்ய தீர்மானித்தனர் (யோ. 12:9-10) அதைத்தான் அவர்கள் செய்தும் முடித்தனர். உலகத் தோற்றமுதலே தேவனுடைய திட்டம், இயேசுவை, முழு உலகினுடைய பாவத்திற்கும் பலியாக ஒரு சிலுவையின் மேல் மரிக்க அனுமதிப்பது என்பதே. அவர் பாவமற்றவராய் இருந்ததால், நாம் அடைய வேண்டிய நிலையை அவர் அடைந்தார். ஆனால் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். இந்த உண்மை களையெல்லாம், அப்போஸ்தலனாகிய பேதுரு, தான் செய்த பெந்தேகொஸ்தே நாளின் முதல் பிரசங்கத்தில் கூறினார்.

"இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தை களைக் கேளுங்கள், நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப் பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவிப்பின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்." (அப்.2:22, 23)

"இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கி றோம்." (அப். 2:32)

"ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே, தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள் என்றான்" (அப். 2:36)

நம்முடைய பாவங்களுக்காக, அவருடைய பாவமற்ற இரத்தம் சிந்தப்படும்படி இயேசு பாவமுள்ள மனிதர்கள் தன்னை சிலுவையில் அறைய அனுமதிக் கொடுத்தார். நாம் எவ்வாறு பாவங்களிலிருந்து மன்னிப்படைய முடியும் என்பது அடுத்து வரும் பாடங்களின் பொருளாக இருக்கும்.